
# புதுக்குறள்



## பராபரன்

# நூல் பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புதுக்குறள் |
| ஆசிரியர் | : | பராபரன் |
| வெளியீடு | : | பராபரம் பாடசாலை |
| மொழி | : | தமிழ் |
| நூல் வகை | : | தன்னாட்டம் |
| முதற்பதிப்பு | : | 2024 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 15 |
| தாள் | : | A4 |
| எழுத்து அளவு | : | பல |
| உரிமை | : | அனைவருக்கும் |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| விலை | : | அகவிழிப்பு |

# என்னுரை

பராபரன் என்ற நாமரூபம் கொண்ட ஈஸ்வரன் புதுக்குறள் என்னும் ஈரடி வெண்பாக்களை இயற்றி பதவுரை செய்கிறார்.

இந்நூலினை படிக்கும் அனைவருக்கும் எளிதாக விளங்கும் வகையில், ஒவ்வொரு புதுக்குறட்பாக்களுக்கும் "பதவுரையும், தெளிவுரையும்" தரப்பட்டுள்ளது.

இந்நூலினை படிக்கும் அன்பர்கள் அனைவருக்கும், எல்லாம் வல்ல ஈஸ்வரன், படிப்பவரின் சிந்தையில் நன்றாக விளங்கும்படி செய்யுமாறு பணிகிறேன்.

அன்புடன்,

**பராபரன்**

# புதுக்குறள்

அறிவையும் அறியாமையையும் அறிவால் அறிந்து
அறிவாக அறிவை அறி ||1||

ஆராய்பவன் ஆராய்ச்சி ஆராயும்பொருளினை ஆராய
ஆராய்பவனே ஆராயுபொருள் ஆவான் ||2||

இருப்பதும் இல்லாததும் இருப்பில் இருக்க
இருப்பில் இருப்பாய் இரு ||3||

ஈசன் ஈசனை ஈசனால் ஈர்த்து
ஈசனில் ஈசன் ஈசனாவான் ||4||

உணர்வை உணர்வாக உணர்ந்து உணர்வில்
உணர்வாய் உணர்த்தும் உணர்வு ||5||

ஊழ்வகை ஊழியூழிகாலம் ஊழ்த்த ஊழ்கத்தால்
ஊழினை ஊகித்து ஊடுசெல்லல் ||6||

என்னில் என்னை எண்ண எண்ண
என்னில் எண்ணம் எது? ||7||

ஏகமாய் ஏகாந்த ஏரியில் ஏர்
ஏகாந்தமே ஏகமென்று ஏர் ||8||

ஐயுறவை ஐயானனிடம் ஐய ஐயானனன்
ஐந்திரசாலிகளின் ஐயக்கிளவியை ஐக்கியமாக்கினான் ||9||

ஒன்றே ஒன்றை ஒன்றாய் ஒன்றி
ஒன்றால் ஒன்றும் ஒன்று ||10||

ஓர்வாச்சியமாம் ஓங்காரத்தை ஓசன் ஓத
ஓதுவான் ஓதி ஓரவத்தையானான் ||11||

# புதுக்குறள் - 1

## அறிவையும் அறியாமையையும் அறிவால் அறிந்து
## அறிவாக அறிவை அறி ||1||

<u>பதவுரை:</u>

- அறிவையும் (அறிவுள்ளவைகள்) - ஓரறிவு தாவரங்கள், ஈரறிவு புலு/பூச்சிகள், மூன்றறிவு ஊர்வன ஜந்துக்கள், நான்கறிவு பறவைகள், ஐந்தறிவு விலங்குகள் மற்றும் ஆறறிவு மனிதர்கள்.
- அறியாமையையும் (அறிவற்றவைகள்) - ஜடப்பொருட்கள் (கல், மண், சவம், சூரியர்கள், சந்திரர்கள், நட்சத்திரங்கள், பால்வளி மண்டலங்கள், முதலியவை).
- அறிவால் - விசாரித்து
- அறிந்து - தெளிவு பெறுதல்
- அறிவாக - ஆத்மாவாகிய **"நான்"**
- அறிவை - ஆத்மாவை **"தன்னை"**
- அறி - தானாக அறிந்து கொள்

<u>தெளிவுரை:</u>

உலகங்களாகவும், உயிர்களாகவும், இறைவனாகவும் இருப்பது அறிவு (ஆத்மா) மட்டுமே. அவ்வறிவே அறிவுள்ள உயிர்களையும், அறிவற்ற ஜடப்பொருட்களையும், அறிவதோடு மட்டுமல்லாமல், தன்னையே விசாரித்து, தன்னை தானே எப்பொழுதும் அறிந்து **"தன்னில் தானாய் தன்மயமாய் தன்நிறைவாய் ரமித்து"** இருக்கிறது. இவ்வாறு எல்லாவற்றையும் அறியும் அறிவை (ஆத்மாவாகிய தன்னை), அறிவாக (தானாக) அறிந்து கொள்.

அதாவது தானான அவ்வறிவு, எந்த நாம ரூபங்களை தன் மீது ஏற்றிவைத்து கொண்டாலும், அந்த நாமமும், ரூபமும், அவ்வறிவு பிரகாசத்தின் பிரதிபலிப்பே தவிர, அப்பிரகாசத்திற்கு வேறானவை அல்ல.

இது எவ்வாறெனில், நாமத்தையும், ரூபத்தையும் நீக்கினால் இருப்பது அறிவு மட்டுமே. அதுபோல நாமமும், ரூபமும் இருப்பதும் அவ்வறிவினாலே. ஆகவே இருப்பது அறிவே மட்டுமே, அவ்வறிவே **"ஆத்மா - நான்"**.

# புதுக்குறள் - 2

**ஆராய்பவன் ஆராய்ச்சி ஆராயும்பொருளினை ஆராய ஆராய்பவனே ஆராயுபொருள் ஆவான் ||2||**

**பதவுரை:**

- ஆராய்பவன் - சாதகனாகிய **"நான்"**
- ஆராய்ச்சி - நான் யார்? என்ற விசாரனை
- ஆராயும்பொருள் - நான் **"என்னிடத்தில்"**
- ஆராய - விசாரிக்க
- ஆராய்பவனே - சாதகனாகிய **"நானே"**
- ஆராயுபொருள் ஆவான் - விசாரிக்கப்படும் பொருள் ஆவான்

**தெளிவுரை:**

ஆராய்பவ(சாதக)னாகிய **"நான்"**, **"நான் யார்"** என்ற ஆராய்ச்சி(விசாரனை)யை, ஆராயும்பொருளான **"என்னிடத்தில்"** விசாரிக்க, ஆராய்பவ(சாதக)னே விசாரிக்கப்படும் பொருள் என்ற முடிவு ஏற்படுகிறது. அதாவது **"எழுவாய் - பயனிலை"** அற்று தன்னையே குறிக்கிறது.

இது எவ்வாறெனில், கடலின் தன்மையை விசாரிக்க உப்பு பொம்மை கடலில் இறங்கி, தன் நாமரூபம் அழிந்து தானும் கடலாவது போல். **"தன்னை"** விசாரிக்க முற்படுகையில், உலகம், உயிர்கள், உலகங்கள் என்ற நாமரூபங்கள் அழிந்து தானாகி விடல்.

# புதுக்குறள் - 3

**இருப்பதும் இல்லாததும் இருப்பில் இருக்க**
**இருப்பில் இருப்பாய் இரு ||3||**

**பதவுரை:**

- இருப்பதும் - புலன்கள் மற்றும் அந்தக்கரணங்களால் அறியப்படுவதும்
- இல்லாததும் - புலன்கள் மற்றும் அந்தக்கரணங்களால் அறியப்படாததும்
- இருப்பில் - அறி(ஆத்மா)வாகிய **"என்னில்"**
- இருக்க - அறிவாய் இருக்க
- இருப்பில் - அறி(ஆத்மா)வில்
- இருப்பாய் - அறிவாய் (ஆனந்தமாய்)
- இரு - இரு

**தெளிவுரை:**

புலன்கள் மற்றும் அந்தக்கரணங்களால் அறியப்படும் உலகங்களும், உயிர்களும், புலன்கள் மற்றும் அந்தக்கரணங்களால் அறியப்படாத இறைவனும், ஆத்மாவாகிய **"என்னில்"** அறிவாய் இருக்க, அறிவில் ஆனந்தமாய் இரு.

அதாவது, பிறபொருளை காட்டுகின்ற சூரியனது ஒளியே தன்னையும் காட்டுகின்றது. சூரியனை வேறு ஒரு ஒளி காட்டிக் கொடுக்க முடியாது. ஆகையால், சூரியனது ஒளியைகொண்டே சூரியனை காணுதல்போன்று, அறிவின் ஒளியால் எல்லாப் பொருட்களையும் அறிவதுடன், அறிவாகிய அதையும், அது கொடுத்த அறிவாலே தான் அறிதல் முடியும்.

# புதுக்குறள் - 4

**ஈசன் ஈசனை ஈசனால் ஈர்த்து**
**ஈசனில் ஈசன் ஈசனாவான் ||4||**

<u>பதவுரை:</u>

- ஈசன் - குருவா(ஈஸ்வரனா)னவர்
- ஈசனை - சீடனை
- ஈசனால் - அவன் செய்த நற்கர்மங்களின் பலனால்
- ஈர்த்து - கவர்ந்து/ஆட்கொண்டு
- ஈசனில் - குருவில் (ஈஸ்வரனில்)
- ஈசன் - சீடன்
- ஈசனாவான் - ஐக்கியமாகிறான்

<u>தெளிவுரை:</u>

சீடன் தான் செய்த நற்கர்மங்களின் பலனாக சித்தசுத்தி ஏற்ப்பட்டு, குருவா(ஈஸ்வரனா)னவர் அச்சீடனை தன்பால் கருனையுடன் அட்கொண்டு, அவனுடைய அறியாமையாகிய இருமைகளை (குரு/ஈஸ்வரன், சீடன் என்ற நாமரூபங்களை) அகற்றி, அறிவில் ஐக்கியமாக்குகிறார்.

அதாவது, சீடனான **"அறிவு"** தன்னை அறிந்து கொள்ள, குருவான(ஈஸ்வரனான) **"அறிவின்"** பால் ஈர்க்கப்பட்டு, அவ்வறிவின் உபதேசமொழிகளை கேட்டு, சிந்தித்து, தெளிந்து. தான் வேறு, குரு/ஈஸ்வரன் வேறு என்ற பேதம் நீங்கி, நாமரூபங்களை கடந்த **"ஏக அறிவாக"** தன்னை உணர்ந்து, தன்னில் **(அறிவில்)** ஐக்கியமாகிறது.

# புதுக்குறள் - 5

**உணர்வை உணர்வாக உணர்ந்து உணர்வில்**
**உணர்வாய் உணர்த்தும் உணர்வு ||5||**

**பதவுரை:**

- உணர்வை - தன்னறிவை
- உணர்வாக - தானாக
- உணர்ந்து - தானறிந்து
- உணர்வில் - தன்னில்
- உணர்வாய் - தானாய்
- உணர்த்தும் - தன்மயமாம்
- உணர்வு - அறிவு

**தெளிவுரை:**

தன்னறிவை (நான் அறிவு) என்பதை, தா(நா)னாக, தா(நா)னறிந்து த(எ)ன்னில், தா(நா)னாய், த(எ)ன்மயமாய் இருத்தலே அறிவு.

# புதுக்குறள் - 6

**ஊழ்வகை ஊழியூழிகாலம் ஊழ்த்த ஊழ்கத்தால்**
**ஊழினை ஊகித்து ஊடுசெல்லல்** ||6||

**பதவுரை:**

- ஊழ்வகை - மூன்று வினைகள் (முன்வினை, நடவினை, வருவினை)
- ஊழியுழிகாலம் - நித்தியம்
- ஊழ்த்த - அழுத்த
- ஊழ்கத்தால் - தியானத்தால்/விசாரத்தால்
- ஊழினை - வினையினை
- ஊகித்து - விசாரித்து
- ஊடுசெல்லல் - ஊடுபோதல்

**தெளிவுரை:**

ஜீவர்கள் (நான் செய்கிறேன், நான் அனுபவிக்கிறேன்) என்று எண்ணிக்கொண்டு (அகங்கார மமகாரத்தினால்), தன்னால் செய்யப்பட்ட செயல்களின் வினைகளாவன - முன்வினை, நடவினை மற்றும் வருவினைளாகும்.

இவ்வினைகள், ஜீவர்கள் எந்த உடல் எடுத்தாலும் நித்தியமும் பீடித்து, அவ்வினைகளின் பலன்களால் அவ்வுடல்களும், மனமும் துன்பப்படும்.

ஜீவன் தான் அடைந்த சித்தசுத்தியால், குருவி(ஈஸ்வர)னிடம் சரணடைய, அவர் உபதேசத்தால், தன்னை விசாரிக்கையில், மூன்று வினைகளின் பலன்கள் யாருக்கு? இருமைகள் மற்றும் அறியாமை யாருக்கு? என்பதற்கான விடைகளை அறிந்து, உணர்ந்து, வினைகள், அறியாமை மற்றும் இருமைகள் முதலியவற்றிலிருந்து விடுபட்டு, வீடுபேற்றை அடைகிறான்.

# புதுக்குறள் - 7

**என்னில் என்னை எண்ண எண்ண**
**என்னில் எண்ணம் எது? ||7||**

**பதவுரை:**

- என்னில் - அறிவாகிய என்னில்
- என்னை - அறிவே **"நான்"** என்று
- எண்ண எண்ண - திடமாக இருக்க
- எண்ணம் - அறிவிற்கு அயலாக வேறு எந்த எண்ணம்
- எது? - இருக்கும்?

**தெளிவுரை:**

எவ்வாறு தங்கத்திற்கு அயலாக நகைகளுக்கு இருப்பு இல்லையோ? களிமண்ணிற்கு அயலாக பானைகளுக்கு இருப்பு இல்லையோ? நூலிழைக்கு அயலாக ஆடைகளுக்கு இருப்பு இல்லையோ?

அவ்வாறே அறிவே **"நான்"** என்று திடஞானத்தை உணர்ந்தவனுக்கு, அவ்வறிவிற்கு அயலாக வேறு எந்த எண்ணம் அவனிடத்தில் இருக்க முடியும்?

# புதுக்குறள் - 8

**ஏகமாய் ஏகாந்த ஏரியில் ஏர்**
**ஏகாந்தமே ஏகமென்று ஏர் ||8||**

<u>பதவுரை:</u>

- ஏகமாய் - "**நான் இருக்கிறேன்**" என்ற அறிவாய்
- ஏகாந்த - ஆனந்த
- ஏரியில் - பஞ்சகோசமாகிய தே(க்)கத்தின் வாயிலாக
- ஏர் - ஒத்திரு
- ஏகாந்தமே - ஆனந்தமே
- ஏகமென்று - "**நான் இருக்கிறேன்**" என்று
- ஏர் - ஒத்திரு

<u>தெளிவுரை:</u>

"**நான் இருக்கிறேன்**" என்ற ஆத்ம அறிவை, ஆனந்தமாய் பஞ்சகோசமாகிய தே(க்)கத்தின் வாயிலாக ஒத்திரு. அவ்வானந்தமே "**நான் இருக்கிறேன்**" என்றும் ஒத்திரு, இதுவே "**சத்சிதானந்தம் - இருப்பறிவின்பம்**" ஆகும்.

# புதுக்குறள் - 9

**ஐயுறவை ஐயானனிடம் ஐய ஐயானனன்**
**ஐந்திரசாலியின் ஐயக்கிளவியை ஐக்கியமாக்கினான் ||9||**

**பதவுரை:**

- ஐயுறவை - சந்தேகத்தை
- ஐயானனிடம் - குருவி(ஈஸ்வர)னிடம்
- ஐய - விசாரிக்க
- ஐயானனன் - குரு(ஈஸ்வரன்)
- ஐந்திரசாலி - மாயையாகிய
- ஐயக்கிளவி - சந்தேக சொற்களை/எண்ணங்கள் (இருமைகளை)
- ஐக்கியமாக்கினான் - ஒன்றாக்கினார்

**தெளிவுரை:**

சீடன் தன்னுடைய சந்தேகத்தை குருவி(ஈஸ்வர)னிடம் விசாரிக்க, குருவா(ஈஸ்வரனா)னவர், சீடனிடம் மாயையால் ஏற்பட்ட சந்தேக சொற்களை/எண்ணங்களை (இருமைகளை) களைந்து ஒன்றாக்கினார்.

# புதுக்குறள் - 10

**ஒன்றே ஒன்றை ஒன்றாய் ஒன்றி**
**ஒன்றால் ஒன்றும் ஒன்று ||10||**

**பதவுரை:**

- ஒன்றே - அறிவே
- ஒன்றை - அறிவை
- ஒன்றாய் - அறிவாய்
- ஒன்றி - அறிந்து
- ஒன்றால் - அறிவால்
- ஒன்றும் - அறியும்
- ஒன்று - அறிவு

**தெளிவுரை:**

இருப்பது பூரணம் மட்டுமே, அப்பூரணத்திலிருந்து பூரணத்தை நீக்கிவிட்டால், எஞ்சி இருப்பதும் பூரணம் மட்டுமே!!!

அதுப்போல, அறிவாகிய **“நான்”** என்னறிவை கொண்டு விசாரித்து, என்னை அறிவாய் அறிந்த பின், எஞ்சி இருப்பதும், அவ்வறிவால் அறியும் அறிவு மட்டுமே!!!

# புதுக்குறள் - 11

**ஓர்வாச்சியமாம் ஓங்காரத்தை ஓசன் ஓத**
**ஓதுவான் ஓதி ஓரவத்தையானான் ||11||**

__பதவுரை:__

- ஓர்வாச்சியமாம் - ஓர் வாக்கியமாம் (அக்ஷரமாம்)
- ஓங்காரத்தை - "**ஓம்**" என்ற வாக்கியத்தை (அக்ஷரத்தை)
- ஓசன் - ஈஸ்வரன் (குரு)
- ஓத - உபதேசிக்க
- ஓதுவான் - சீடன்
- ஓதி - ஓதி (உணர்ந்து)
- ஓரவத்தையானான் - பிரம்ம(தன்மய)மானான்

__தெளிவுரை:__

குருவா(ஈஸ்வரனா)னவர் சீடனுக்கு, ஓர் வாக்கிய(அக்ஷர)மாம் "**ஓம்**" என்ற வாக்கிய(அக்ஷர)த்தை உபதேசிக்க, சீடனானவன் அதனை ஓதி உணர்ந்து, பிரம்ம(தன்மய)மானான்

## ஓம் தத் சத்